விஜயபாரதம்
மின்னனு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, ஆடி - 9 ஞாயிறு 25.07.2021 மலர் - 2, இதழ் - 110

# சேகர் பாபுவின் மாஸ்டர் பிளான்


விஜயபாரதம்

சேலத்தில் செய்தியாளர்களிடம் பேசிய ஹிந்து அற நிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு, 'கும்பாபிஷேகம் செய்ய வேண்டிய கோயில், பணி தாமதமாகியுள்ள கோயில், ஆகம விதிப்படி 12 ஆண்டுக்கு ஒருமுறை கும்பாபிஷேகம் செய்ய வேண்டிய கோயில் என வகைப்படுத்தி அனைத்து கோயில்களுக்கும், 'மாஸ்டர் பிளான்' என்ற திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. ஆகம விதிப்படி திருப்பணி நடக்கும். கோயில் வளாகத்தில் வாய்ப்புள்ள இடங்களில் திருமண மண்டபம் கட்டப்படும். அந்தந்த வருவாய், அந்தந்த கோயில்களுக்கு பயன்படுத்தப்படும். 9 ஆண்டுகளாக கோயில்களுக்கு பக்தர்கள் வேண்டுதலாகக் கொடுத்துள்ள தங்க நகைகள் உருக்கப்படாமல் உள்ளன. அதில் கோயில் பயன்பாட்டுக்கு போக, மீதியை உருக்கி தங்க பிஸ்கட்டுகளாக மாற்றி வைப்பு நிதியில் வைக்கப்படும். இதன் மூலம், ஆண்டுக்குரூ. 20 கோடி வட்டி கிடைக்கும். ஹிந்து அறநிலையத் துறை கோயில்கள், தனியார் சொத்துகள் கிடையாது. பல மன்னர்கள், ஜமீன்தார், செல்வந்தர்களால் கோயில்களுக்கு நன்கொடைகளாக வழங்கப்பட்டுள்ளன. அதனால், தனியாரிடம் கோயில்களை ஒப்படைக்க முடியாது' என தெரிவித்தார்.

இது குறித்து சமுக ஊடகங்களில் கருத்து தெரிவித்துள்ள ஹிந்துக்கள், தங்க நகை உருக்குவதாகக்கூறி பழங்கால நகைகளை அழித்துவிடக்கூடாது, இது போன்ற சமயங்களில் சிலர் தங்கத்தை திருட அதிக வாய்ப்புகள் இருப்பதால் தங்கத்தின் எடை, தரம் உள்ளிட்டவை முறையாகவும் கவனமாகவும் கண்காணிக்கப்பட வேண்டும் என கருத்துத் தெரிவித்துள்ளனர். மேலும், ஹிந்து கோயில்களை அரசுதான் அறநிலையத்துறை என்ற பெயரில் ஆக்கிரமித்து வைத்துள்ளது. அதற்கு முன்பு அப்படி இல்லை. தனியாரிடம் தர சொல்லி யாரும் கோரவில்லை. மதசார்பற்ற அரசுக்கு கோயிலில் என்ன வேலை? அதனை ஹிந்து அமைப்புகளிடம் தந்துவிட்டு அரசு கோயிலை விட்டு வெளியேற வேண்டும் என்றுதான் பல காலமாகக் கோரிக்கை வைக்கப்பட்டு வருகிறது. இதனை அமைச்சர் புரிந்துக்கொள்ள வேண்டும் என சுட்டிக்காட்டியுள்ளனர்.

# கண்டறியப்பட்ட ஆக்கிரமிப்புகள்





விஜயபாரதம்

தர்மபுரி மாவட்டம் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள ஹிந்து அறநிலையத் துறைக்கு சொந்தமான கோயில் சொத்துகள், நீர்நிலை ஆக்கிரமிப்புகள், நெடுஞ்சாலை ஆக்கிரமிப்புகளை அகற்றுவது குறித்து, சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. நீதிமன்ற உத்தரவின்படி, தர்மபுரி அட்சியர், ஆக்கிரமிப்புகள் குறித்து அனைத்து துறை அலுவலர்களுடன் ஆய்வு செய்து அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட்டார். இதையடுத்து, பாப்பாரப்பட்டியில் வருவாய்துறை, அறநிலையத்துறை,நெடுஞ்சாலைத்துறை உள்ளிட்ட அதிகாரிகள், இரண்டு நாட்களாக ஆக்கிரமிப்புகள் குறித்து ஆய்வு செய்து வருகின்றனர். அதன்படி, இதுவரை 400 ஏக்கர் நில ஆக்கிரமிப்புகள் கண்டறியப்பட்டுள்ளது. பணிகள் தொடர்ந்து நடைபெறுகிறது என திருத்தொண்டர் சபை நிறுவன தலைவர் ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

---

# ஆளுநரிடம் அளிக்கப்பட்ட புத்தகம்

ஆர்.எஸ்.எஸ் வடதமிழகம் சம்பர்க விபாக் சார்பில் தமிழக கவர்னர் பன்வாரிலால்ஜு புரோகித்தை சந்தித்த ஆர்.எஸ்.எஸ் தென்பாரத சம்பர்க ப்ரமுக் B பிரகாஷ், வடதமிழக சம்பர்க ப்ரமுக் S கல்யாண், வடதமிழக சஹ சம்பர்க ப்ரமுக் இராம இராஜசேகர் ஆகியோர் ராஷ்ட்ரீய சேவா பாரதியின் covid 19 சேவைகள் பற்றிய தொகுப்பு புத்தகமான 'Coffee Table book' வழங்கினர்.

விஜயபாரதம்



# முதல் பதக்கம் மோடி வாழ்த்து



விஜயபாரதம்

டோக்கியோ ஒலிம்பிக்கில் பளுதூக்கும் போட்டியில் பாரதத்திற்கு ஒரு பதக்கத்தை உறுதி செய்தார் மீராபாய் சானு. மகளிர் 49 கிலோ எடை பிரிவில் பளுதூக்கும் போட்டியில் வெள்ளி பதக்கத்தை வென்று பதக்க வேட்டையை துவக்கிவைத்துள்ளார். பாரதத்திற்கு முதல் பதக்கத்தை பெற்றுக் கொடுத்த மீராபாய் சானுவுக்கு பாராட்டுக்களும், வாழ்த்துக்களும் குவிந்து வருகின்றன. பிரதமர் மோடியும் வாழ்த்து தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், 'டோக்கியோ ஒலிம்பிக்கிற்கு இதைவிட ஒரு மகிழ்ச்சியான தொடக்கம் இருக்க முடியாது. மீராபாய் சானுவின் சிறப்பான செயல்பாடுகளால் பாரதம் உற்சாகம் அடைந்துள்ளது. பளு தூக்கும் போட்டியில் வெள்ளி வென்ற அவருக்கு எனது வாழ்த்துக்கள். அவரது இந்த வெற்றி ஒவ்வொரு பாரதத்தினரையும் ஊக்கப்படுத்தும்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

# தொ.மு.ச. அடாவடி




விஜயபாரதம்

தி.மு.க., ஆட்சிக்கு வந்தது முதல், காவல் நிலையம், அரசு அலுவலகங்கள், வணிகர்கள், பொதுமக்கள் என அனைத்து இடங்களிலும் அவர்களது கட்சியினர் செய்யும் அடாவடிகள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன. அவ்வகையில், தி.மு.க தொழிற்சங்கமான தொ.மு.ச நிர்வாகிகள், அதிகாரிகளை மிரட்டுகின்றனர். மற்ற தொழிற்சங்கத்தினரை தங்களது சங்கத்தில் இணைய வற்புறுத்துகின்றனர். சந்தா செலுத்தாவிட்டால் பணி இல்லை என மிரட்டி கட்டாய உறுப்பினராக மாற்றுகின்றனர். மாறாதவர்களுக்கு பணி அளிப்பதில்லை, பொய் புகாரில் மெமோ வழங்கப்படுகிறது. சம்பளம் கிடைக்காமல் செய்கின்றனர் என்ற குற்றச்சாட்டுகள் தொடர்ந்து முன்வைக்கப்படுகிறது. இதற்கு உடன்படாதவர்களின் பட்டியலைப் பெறும் கிளை மேலாளர்கள், தொழிலாளர்களுக்கு, ஒரு மாதமாக பணி வழங்காமல் இழுத்தடிக்கின்றனர். இதனால், சம்பளத்துக்கு வழியில்லாத ஊழியர்கள் கடும் மன உளைச்சலுக்கு ஆளாகி உள்ளனர்.இது குறித்து, பஸ் ஊழியர்கள் கூறிய தாவது:தி.மு.க., ஆட்சிக்கு வந்தது முதல், கிளை மேலாளர்கள் ஆளுங்கட்சியினர் போலவே செயல்படுகின்றனர். தொழிலாளர்களிடம் பிரிவினையை உருவாக்குவது போல் செயல்படுவதோடு, பொய் புகார்களைக் கூறி, 'மெமோ' வழங்குகின்றனர். மூன்று வாரங்களாக பணி இல்லாமல் சென்னை, பூந்தமல்லி பணிமனையில் ஓட்டுனராக பணிபுரியும் சரவணன் என்பவர் தீக்குளிக்க முயன்று, சக தொழிலாளர்களால் காப்பாற்றப்பட்டார். அவரது புகாரில் இதுவரை காவலர்களோ அரசோ எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதே தொ.மு.சவின் அராஜகத்துக்கு அத்தாட்சி.

# தடுப்பூசி தமிழகம் முதலிடம்



விஜயபாரதம்

தடுப்பூசி திட்டம் குறித்து நாடாளுமன்றத்தில் காங்கிரஸ் எம். பி ராகுல் காந்தி எழுப்பிய கேள்விக்கு மத்திய அரசு அளித்த பதிலில் 41 லட்சம் கூடுதல் டோஸ்கள் குப்பிகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு பல்வேறு மாநிலங்களால் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதில் அதிகபட்சமாக தமிழகம் 5.88 லட்சம் கூடுதல் டோஸ்களை எடுத்து பயன்படுத்தியுள்ளது. மேற்கு வங்கம் 4.87 லட்சம் டோஸ்கள், குஜராத் 4.62 லட்சம் கூடுதல் டோஸ்களையும் பிரித்தெடுத்து செலுத்தியுள்ளன. பீகாரில் அதிகபட்சமாக 1.26 லட்சம் டோஸ் தடுப்பூசி மருந்து வீணடிக்கப்பட்டது. இது நாட்டில் வீணடிக்கப்பட்ட அளவில் பாதி அளவு என தெரிவித்துள்ளது. மேலும், கொரோனா தடுப்பூசி திட்டத்திற்கான ரூ. 35,000 கோடி பட்ஜெட்டில், தடுப்பூசி கொள்முதலுக்கு ரூ. 8071 கோடி, செயல்பாட்டு செலவுகளுக்காக 1,654.15 கோடி என இதுவரை ரூ. 9725.15 கோடி செலவிடப்பட்டுள்ளது. 2021 டிசம்பர்வரை 100.6 கோடி டோஸ்களுக்கான ஆர்டர்கள் தரப்பட்டுள்ளன. 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு 2021 டிசம்பருக்குள் தடுப்பூசி போடமுடியும் எதிர்பார்க்கிறோம். உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்ட ஆர்டர்களுக்கு முன்கூட்டியே பணம் செலுத்தப்பட்டுள்ளது' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ட்ரோன் எதிர்ப்பு அமைப்பு



விஜயபாரதம்

ஜம்மு காஷ்மீரின் அக்னூர் பகுதியில் அத்துமீறி புகுந்த ஒரு ட்ரோனை பாதுகாப்பு படையினர் சுட்டு வீழ்த்தினர். ட்ரோனுடன் இணைக்கப்பட்டிருந்த 5 கிலோ வெடிகுண்டு கைப்பற்றப்பட்டுள்ளது. முன்னதாக கடந்த மாதம் 27ல் ஜம்மு விமானப்படைத் தளத்தில் 2 ட்ரோன்கள் மூலம் லஷ்கர்இ தொய்பா பயங்கரவாதிகள் குண்டுகளை வீசினர். பாகிஸ்தானில் இருந்து செயல்படும் முஸ்லிம் பயங்கரவாத குழுக்களும் காலிஸ்தான் பயங்கரவாத குழுக்களும் தங்களது பயங்கரவாத தொடர்புகளுக்கு ஆயுதங்களையும், வெடிகுண்டுகளையும் கடத்துவதற்கும், குண்டு வீசி தாக்குதல் நடத்தவும் ட்ரோன்களை பயன்படுத்துவது அதிகரித்து வருகிறது. இதனையடுத்து, கர்நாடக மாநிலம் கோலாரில் சோதித்துப் பார்க்கப்பட்ட ட்ரோன் எதிர்ப்பு அமைப்பின் புரோட்டோடைப்பை, சோதித்து பார்ப்பதற்காக, ஜம்மு மற்றும் பஞ்சாப் எல்லைக்கு கொண்டு வருமாறு டி.ஆர்.டி.ஓ.விடம் எல்லை பாதுகாப்புப் படை கேட்டுக் கொண்டுள்ளது. 4 கிலோ மீட்டர் தூரம் வரையிலான ரேடார் கண்காணிப்பு திறன், 2 கிலோ மீட்டருக்குள் எதிரி ட்ரோன்களை தடுக்கும் திறன், ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்குள் அவற்றை அழிக்கும் திறன் ஆகியவையும் அதற்கு இருப்பது முன்பே சோதனையில் உறுதி செய்யப்பட்டிருந்தது.

# பாரத முன்னேற்றம் ஐ.நா. ஆய்வறிக்கை

United Nations ESCAP

விஜயபாரதம்

டிஜிட்டல், நிலையான வர்த்தக வசதி குறித்த ஆசிய பசிபிக் பகுதிக்கான ஐ.நா. பொருளாதார மற்றும் சமூக ஆணையமான UNESCAP, 143 நாடுகளில் ஆய்வு மேற்கொண்டது. இந்த ஆண்டு இதில், பாரதம் 90.32 சதவீத மதிப்பெண்களை பெற்றுள்ளது. முன்னதாக கடந்த 2019ல் இது 78.49 சதவீதமாக இருந்தது. அந்த கணக்கெடுப்பில், பாரதம் வெளிப்படைத்தன்மையில் 100 சதவீதம் பெற்றுள்ளது. ( 2019ல் இது 93.33 சதவீதம்), நிறுவன ஏற்பாடு, ஒத்துழைப்புகளில் 88.89 சதவீதம் ( 2019ல் இது 66.67 சதவீதம்), காகிதமில்லா வர்த்தகத்தில் இந்த ஆண்டில் 96.3 சதவீதம் (2019ல் இது 81.48 சதவீதம்), நாடுகளை தாண்டிய வர்த்தகத்தில் 66.67 சதவீதம் ( 2019ல் இது 55.56 சதவீதம்) என கணக்கிடப்பட்டுள்ளது. பாரதத்தின் ஒட்டுமொத்த மதிப்பெண்கள், பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பான OECDயில் உறுப்பினராக உள்ள பிரான்ஸ், இங்கிலாந்து, கனடா, நார்வே, பின்லாந்து நாடுகளைவிடவும், தெற்கு மற்றும் தென்மேற்கு ஆகிய நாடுகள், ஆசிய பசிபிக் நாடுகள் ஆகியவற்றை விடவும் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

# கிறிஸ்துவக் காப்பகக் கொடுமை




விஜயபாரதம்

மதுரை மாவட்டம் முத்துப்பேட்டை பகுதியில் கென்னட் அறக்கட்டளைக்கு சொந்தமான கிறிஸ்தவ சேவா சங்கம் என்ற ஆதரவற்றோர் மற்றும் மனவளர்ச்சி குன்றியோருக்கான கட்டண காப்பகம் இயங்கி வருகிறது. இந்த காப்பகத்தில் மனவளர்ச்சி குன்றிய 45 வயது மதிக்கத்தக்க பெண் கர்பமடைந்துள்ளார். இதனை குறித்து அவரது அண்ணன் அளித்த புகாரின் பேரில் விசாரித்த காவல்துரையினர், அங்கு வேலை பார்த்து வந்த 67 வயதான ஊழியர் ஜீவநேசன் என்பவர்தான் இதற்கு காரனம் என கண்டறிந்தனர். இதனையடுத்து ஜீவநேசன் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். இச்சம்பவம் குறித்து காப்பக நிர்வாகிகள் 10 பேர், காப்பதக ஊழியர்களிடம் தீவிர விசாரணை நடைபெற்று வருகிறது. காஷ்மீரின் அசிஃபா பானு, உ.பி, ஹத்ராஸ் பெண் கொலை வழக்கு போன்ற வெளிமாநில பெண்களுக்காக போராடிய தி.மு.கவின் கனிமொழி, ஜனநாயக மாதர் சங்கத்தினர், வை.கோ, திருமாவளவன், கம்யூனிஸ்ட்டுகள் என யாரும், தமிழகத்தில் நடந்த இந்த கொடுமை குறித்து இதுவரை வாய் திறக்கவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

# மீண்டும் லாட்டரி சீட்டா?



விஜயபாரதம்

கருணாநிதி தமிழக முதல்வராக இருந்தபோது, தனியாரை நுழையவிட்டு லாட்டரி சீட்டு திட்டத்தை சீரழித்தார். வெளிமாநில லாட்டரிகள் அனுமதிக்கப்பட்டது. மக்களிடையே பேராசை தூண்டப்பட்டது. இதனால், லாட்டரி சீட்டு தமிழகத்தில் சூதாட்டமாக மாறியது. தனியார் லாட்டரி ஏஜெண்ட்டுகள், வெளிமாநில லாட்டரி சீட்டுக்களை கள்ள நோட்டுகளைப் போல அச்சிட்டு மக்களிடம் விற்றார்கள். இதனால் அப்பாவி ஏழை, எளிய மக்கள் தங்கள் குடும்பத்தையும், வாழ்வையும் இழந்தார்கள். பல அப்பாவிகள் தற்கொலை செய்துகொண்டனர். இதனையடுத்து கடந்த 2003ல் தமிழகத்தின் ஏழை, எளிய மக்களைக் காப்பாற்ற, முன்னாள் முதல்வர் ஜெயலலிதா லாட்டரி சீட்டை ஒழித்தார். ஆனால், தற்போதுள்ள தி.மு.க அரசு அதனை மீண்டும் கொண்டு வர நினைக்கிறது.அப்படி கொண்டுவந்தால் தமிழக மக்களின் மிகப் பெரிய எதிர்ப்பை ஸ்டாலின் சந்திக்க நேரிடும். எனவே, லாட்டரி சீட்டை மீண்டும் இந்த அரசு கொண்டு வர முயற்சிக்க வேண்டாம் என்று தமிழக எதிர்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

# தலைமறைவான பாதிரி கைது



விஜயபாரதம்

கன்னியாகுமரி மாவட்டம் அருமனையில் கிறிஸ்தவ இஸ்லாமிய அமைப்புகள் இணைந்து சிறுபான்மை சமூகத்தின் உரிமை மீட்பு போராட்டம் நடத்தின. அந்த போராட்டத்தில் கலந்துகொண்ட ஜனநாயக கிறிஸ்தவ பேரவை அமைப்பின் ஆலோசகரும், பனவிளை சர்ச் பங்குத் தந்தையுமான பாதிரி ஜார்ஜ் பொன்னையா, பாரதமாதா, பூமித்தாய் என ஹிந்துக்கள் புனிதமாகக் கருதும் தெய்வங்கள், பாரத மக்கள் நேசிக்கும் தாய்மண், தேசத் தலைவர்கள், சட்டமன்ற உறுப்பினர்களை தரக்குறைவாக பேசினார். மேலும், தி.மு.க ஆட்சிக்கு வந்தது நாங்கள் போட்ட பிச்சை என கேவலப்படுத்தினார். இது குறித்து ஹிந்து அமைப்பினர் காவல் நிலையங்களில் புகார் அளித்தனர். இதையடுத்து மன்னிப்பு கேட்டு வீடியோ வெளியிட்ட பாதிரி பொன்னையா தலைமறைவானார். மதுரை மாவட்டம் கள்ளிக்குடியில் தலைமறைவாக இருந்த பாதிரியை காவல்துறை கண்டறிந்து கைது செய்தது.

# ராகுல் அலைபேசியை ஒப்படைப்பாரா?



விஜயபாரதம்

தனது அலைபேசி ஒட்டுக் கேட்கப்படுவதாக தொடர்ந்து புகார் கூறிவரும் காங்கிரஸ் தலைவர் ராகுல், தனது அலைபேசியை விசாரணைக்காக விசாரணை அமைப்பிடம் ஒப்படைக்க வேண்டும். அவர்கள் சட்டப்படி, விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுப்பார்கள். நாட்டின் வளர்ச்சியை காங்கிரஸ் கட்சியால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. அதன் காரணமாகவே நாடாளுமன்ற செயல்பாடுகளை முடக்குகிறது' என பா.ஜ.க செய்தித் தொடர்பாளர் ராஜ்யவர்தன் ராத்தோர் கூறியுள்ளார்.

# என்.ஐ.ஏ. சோதனை





விஜயபாரதம்

தேனி மாவட்டம் சின்னமனூரில் உள்ள யூசுப் அஸ்லாம் என்பவரது வீட்டில் தேசிய புலனாய்வு முகமை (என்.ஐ.ஏ.,) அதிகாரிகள் சோதனை நடத்தினர். தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்புடன் அவருக்கு தொடர்பு உள்ளதாக வந்த தகவலை அடுத்து அவரது வீடு, கடைகளில் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அதேபோல மதுரை, தெப்பக்குளம், தமிழன் தெருவில் வசித்து வரும் அப்துல்லா என்பவரது வீட்டிலும் என்.ஐ.ஏ அதிகாரிகள் சோதனை நடத்தினர். அவர் பாரத இறையாண்மைக்கு எதிராக சமூக வலைதளங்களில் கருத்துக்களை பதிவிட்டதாக வழக்கு பதியப்பட்டது. இது தொடர்பாகவே சோதனை நடைபெற்றது.

# மோடிக்கு அமெரிக்கா பாராட்டு



விஜயபாரதம்

உலகலாவிய கொரோனா போன்ற நெருக்கடியான காலகட்டத்திலும் பாரதத்தில் சுற்றுசூழலுக்கு மாசு ஏற்படுத்தாத சூரிய ஒளி, காற்று உள்ளிட்ட எரிசக்தி பயன்பாட்டை மேம்படுத்துவதில் பிரதமர் மோடி தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறார் என பருவநிலை மாற்ற விவகாரங்களுக்கான அமெரிக்க சிறப்புத் தூதர் ஜான் கெரி கூறினார். மேலும், பருவநிலை மாற்றத்தைக் கட்டுபடுத்துவதற்கான ஒழுங்குமுறை ஆணையத்தை அமைத்தல், அதற்கு உகந்த சந்தைகளை ஏற்படுத்துதல், தேவையான முதலீடுகள் மூலம் சுமார் 450 ஜிகாவாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை உற்பத்தி செய்யும் பாரதத்தின் இலக்கை எட்டுவதற்கு அமெரிக்கா ஒத்துழைப்பு அளிக்கும் என தெரிவித்துள்ளார்.

# உண்மையை ஒப்புக்கொண்ட காங்கிரஸ்




விஜயபாரதம்

காங்கிரஸ் கட்சியின் பஞ்சாப் மாநிலத்தின் புதியத் தலைவராக நவ்ஜோத் சிங் சித்து நியமிக்கப்பட்டதை ஒட்டி நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய முன்னாள் பஞ்சாப் மாநிலத் தலைவர் சுனில் ஜாகர், 'விவசாய போராட்டத்தை முதல்வர் கேப்டன் அமரீந்தர் சிங் சிறப்பாகக் கையாண்டார். வேறு யாராவது முதலமைச்சராக இருந்திருந்தால் இந்நேரம், பஞ்சாப் அரசு, மத்திய அரசைவிட அதிகமான பிரச்சனையை எதிர்கொண்டிருக்கும். அமரீந்தர் சிங், அவர்களை அற்புதமாகக் கையாண்டு டெல்லிக்கு அனுப்பி போராட வைத்தார்' என கூறியுள்ளார். சுனில் ஜாகரின் இந்த கூற்று விவசாயப் போராட்டத்தை காங்கிரஸ் கட்சிதான் பின் நின்று இயக்குகிறது என்று முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டை நிரூபித்துள்ளது. இந்த விவசாய போராட்டம் நடக்கும் இடங்கள் தற்போது கொலைகள், பாலியல் துன்புறுத்தல்கள், அடிதடி போன்றவை அடிக்கடி நடைபெறும் குற்றவாளிகளின் சொர்கபுரியாகவே மாறி வருவது அனைவருக்கும் தெரிந்ததே.

---

# தலைவரின் பின்புலம்



விஜயபாரதம்

நியூஸ் 1 இந்தியா என்ற தொலைக்காட்சி சேனலில் விவசாயப் போராட்டத் தலைவர் ராகேஷ் திகாயத்தை பேட்டி கண்ட கரிமா சிங், கடந்த 2014 தேர்தலில் ஜாட் சமூகத்தினர் வாக்குகளை மோடிக்கு பெற்றுத்தந்து வெற்றி பெற வைத்தது நான்தான் என கூறினீர்கள். ஆனால், அங்கு இரண்டுமுறை நீங்கள் போட்டியிட்டபோது ஏன் மோசமாக தோற்றீர்கள் என கேள்வி கேட்டார். இதனால் சங்கடமடைந்த ராகேஷ், ஆம் மக்கள் என்னை தோற்கடித்தனர் என ஒப்புக்கொண்டார். இது அவரது உண்மையான பலத்தை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது. மேலும், விவசாயிகள், ஜாட் சமூகத்தினர் என யாரும் அவரது பின்னால் இல்லை என்பதும், காங்கிரஸ், ஆம் ஆத்மி உள்ளிட்ட அரசியல் கட்சியினரும், காலிஸ்தான் பயங்கரவாத ஆதரவாளர்களும்தான் இவரை இயக்குகின்றனர் என்பதும் இதனால் தெரியவந்துள்ளது. சமீபத்தில் உத்தரபிரதேசத்தில் நடைபெற்ற ஜில்லா பரிஷத் தேர்தலில், ராகேஷ் திகாயத்தின் சொந்தத் தொகுதியில் பா.ஜ.க அமோக வெற்றிபெற்றது குறிப்பிடத்தக்கது.

# விண்வெளியில் விவசாயம்




விஜயபாரதம்

பூமியை தாண்டி புவிசூழலில் இருந்து முற்றிலும் மாறுபட்ட விண்வெளியில் பல்வேறு ஆராய்ச்சிகளை சர்வதேச விண்வெளி நிலையம் ஆராய்ச்சி நிறுவப்பட்டு அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகள் பல்வேறு ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றன. அவ்வகையில், அங்கு பச்சை மிளகாயை பயிரிட்டு வளர்த்து நாசா சாதனை படைத்துள்ளது.

இந்த சாதனம் 180 சென்சார்கள் உதவியுடன் களிமண்ணில் தூவப்பட்ட மிளகாய் விதைகள் வளர்வதற்கு பூமியில் உள்ளதை போன்றே நீர், உரம், ஒளி, வெப்பம் போன்றவற்றை தருகிறது. இதனால் செழித்து வளர்த்த மிளகாய் செடிகள் 4 மாதங்களில் அறுவடைக்கு தயாராகிவிட்டன. நாசா அனுமதி கிடைத்ததும் மிளகாய்களை விண்வெளி வீரர்கள் அறுவடை செய்வார்கள். அவர்கள் பயன்படுத்தியது போக எஞ்சிய மிளகாய்கள் ஆய்வுக்காக பூமிக்கு அனுப்பி வைக்கப்படும். பூமியைத் தாண்டி பிற கோள்களையும் ஆக்கிரமிக்கத் துடிக்கும் மனித இனத்தின் ஆராய்ச்சியில் இது ஒரு முக்கிய மைல்கல்லாக கருதப்படுகிறது.

# ஆப்கானிஸ்தானில் தாலிபான்கள்



விஜயபாரதம்

அமெரிக்க படைகள் வாபஸ் ஆவதை தங்களுக்கு சாதகமாக்கிக் கொண்ட தலிபான் பயங்கரவாதிகள், நாட்டை மீண்டும் கைப்பற்ற தீவிரமாக முயற்சித்து வருகிறார்கள். ஆப்கானிஸ்தானில் மொத்தமுள்ள 400 மாவட்டங்களில் 200 மாவட்டங்கள் தற்போது தலிபான்கள் வசம் சென்றுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. பாகிஸ்தான், ஈரான், கஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகளை ஒட்டியுள்ள ஆப்கானிஸ்தானின் எல்லைப்பகுதிகளில் பெரும்பாலானவை தலிபான்கள் வசம் சென்றுவிட்டன. 90 சதவீத எல்லைப் பகுதிகளை கைப்பற்றிவிட்டோம். ஒட்டுமொத்த எல்லை பகுதி முழுவதையும் நாங்கள் விரைவில் கைப்பற்றிவிடுவோம். அதன் பிறகு நாடு முழுவதும் எங்கள் வசம் வரும். அதே நேரத்தில் ஐ.எஸ்.ஐ.எஸ் போன்ற வெளிநாட்டு பயங்கரவாத அமைப்புகள் ஆப்கானிஸ்தானில் செயல்பட அனுமதிக்க மாட்டோம் என தலிபானின் செய்தி தொடர்பாளர் முஜாகித் தெரிவித்துள்ளார்.

# கம்யூனிஸ்டுகளின் சர்ச்சை போஸ்டர்


விஜயபாரதம்

ஹிந்து கலாச்சாரத்தின் மீது கம்யூனிஸ்டுகளுக்கு உள்ள ஆழமான வெறுப்பைக் காட்டும் மற்றொரு சம்பவமாக, கேரளா, மலப்புரம் மாவட்டத்தில் உள்ள பீச்சேரி விஷ்ணு கோயிலின் பெயர் பலகைக்கு மேலே கேரள முதல்வர் பினராயி விஜயனை ‘கடவுள்’ என்று சித்தரித்து சி.பி.எம் கட்சியினர் ஒரு சுவரொட்டி வைத்துள்ளனர். அதில் ‘கடவுள் யார் என்று நீங்கள் கேட்கிறீர்கள், உங்களுக்கு உணவைக் கொடுப்பவர் யாரோ அவரே கடவுள்’ என்றும் எழுதப்பட்டிருந்தது. ஹிந்து உணர்வுகளுடன் விளையாட கம்யூனிஸ்ட்டுகள் முயற்சிப்பதையே இது எடுத்துக் காட்டுகிறது. இதே சுவரொட்டியை ஒரு கிறிஸ்தவ தேவாலயம் அல்லது மசூதிக்கு வெளியே வைக்க அந்த கட்சிக்கு தைரியம் இருக்கிறதா என்று அங்குள்ள ஹிந்துக்கள் கேள்வி எழுப்பினர். மேலும், இதனை எதிர்த்து ஒரு போராட்டத்தை நடத்தவும் அவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

# வழிகாட்டும் ரவீந்திர ஜடேஜா


விஜயபாரதம்

பாரதத்தை சேர்ந்த முன்னணி கிரிக்கெட் விளையாட்டு வீரரும் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியை சேர்ந்தவருமான சுரேஷ் ரெய்னா, தமிழ்நாடு பிரீமியர் லீக்கில் ஒரு போட்டியின்போது கருத்துத் தெரிவிக்கையில், தன்னை ஒரு பிராமணர் என்று அடையாளப்படுத்திக்கொண்டார். இதனால் இடதுசாரி ஆதரவாளர்களால் அவர் சமூக வலைத்தளங்களில் கடுமையாக விமர்சிக்கப்பட்டார். கிண்டலுக்கு ஆளானார். இதற்கு பதிலடி தரும்விதமாக வரது நண்பரான பிரபல கிரிக்கெட் வீரரான ரவீந்திர ஜடேஜா, தற்போது வரவிருக்கும் டெஸ்ட் தொடருக்காக இங்கிலாந்து சுற்றுப் பயணம் குறித்த தனது டுவிட்டர் பதிவில், அவர் தன்னை 'என்றும் பெருமைமிக்க ரஜபுத்திர இளைஞன்’ என தன்னை அடையாளப்படுத்திக் கொண்டார்.

‘தொடர்ந்து பல காலமாகவே, சமூக ஊடக தளங்களில் இடதுசாரிகளும், திராவிட கட்சிகளும் ஹிந்துக்கள் தங்கள் ஜாதி மற்றும் ஹிந்து அடையாளத்தை வெளிப்படுத்துவதை ஏளனம் செய்து வருகின்றன. இதனை கண்டு பயந்து நமது அடையாளத்தை மறைத்துக்கொள்ளத் தேவையில்லை, மதம் மாறத் தேவையில்லை, அவர்களை ஊக்குவிக்கும் விதமாக எதுவும் செய்ய வேண்டியதில்லை. மாறாக நாம் நமது அடையாளத்தை தைரியமாகவும் பெருமையாகவும் வெளிப்படுத்துவது ஒன்றுதான் இவர்களை எதிர்கொள்ள சரியான வழி என வழிகாட்டியுள்ளார் ஜடேஜா’ என நெட்டிசன்கள் அவருக்கு புகழாரம் சூட்டி வருகின்றனர்.

# கட்டுக்கதையை உடைத்தெறிந்த ஆய்வறிக்கை



விஜயபாரதம்

வரதட்சணை வாங்குவதும் கொடுப்பதும் குற்றம் என அரசு அறிவித்திருந்தபோதும், வரதட்சணை வாங்குவது நடந்துகொண்டுதான் உள்ளது. அதனை முற்றிலும் தடுக்கவோ ஒழிக்கவோ முடியவில்லை என்பது நிதர்சனம். இந்நிலையில், "இந்திய கிராமப்புறங்களில் வரதட்சணை பரிணாமம்: 19602008" என்ற தலைப்பில் ஒரு ஆய்வை எஸ். அனுக்ரிதி, நிஷித் பிரகாஷ், சுங்கோ க்வோன் ஆகிய பொருளாதார வல்லுநர்கள் குழுவினர் பல ஆண்டுகளாக நடத்தினர். மக்கள்தொகை விகிதாசாரத்தை ஒட்டி, 17 மாநிலங்களில் 40,000 திருமணங்களிலிருந்து இந்தத் தரவுகள் சேகரிக்கப்பட்டது. அந்த முடிவு கடந்த ஜூன் 30ல் வெளியானது. அந்த ஆய்வு முடிவுகள் பல அதிர்ச்சித் தகவல்களையும் வெளிப்படுத்தியுள்ளது. ஆய்வில் 95 சதவீத திருமணங்களில் வரதட்சணை வாங்கப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது. வரதட்சணை ஹிந்து மதத்தில் மட்டுமே பெறப்படுகிறது என்ற கட்டுக்கதையை இந்த ஆய்வு முடிவு உடைத்தெறிந்துள்ளது. ஆய்வின்படி, கிறிஸ்தவர்களும் சீக்கியர்களும்தான் அதிகமாக வரதட்சணை வாங்கியுள்ளனர். ஹிந்துக்களுடன் ஒப்பிடுகையில் முஸ்லிம்கள் அதிகமாக வரதட்சணை வாங்கியுள்ளனர். என இந்த ஆய்வு நிரூபித்துள்ளது.

# திருப்பதியே முக்கியம்



விஜயபாரதம்

ஒரு குரு தன்னிடம் படித்த முன்னாள் சீடர்களுக்கு விருந்தளிக்க ஏற்பாடு செய்தார். அவர்களும் ஏராளமாய் குவிந்தனர்.விருந்து துவங்கும் முன் சீடர்களிடம்,நீங்கள் மனிதர்களைப் போல் உண்ணப் போகிறீர்களா? விலங்குகளைப் போல் உண்ணப் போகிறீர்களா? என்று கேட்டார்.எதற்காக இப்படி கேட்கிறார் என்று புரியாத சீடர்கள்,ஏன்...மனிதர்களைப் போல் தான் உண்ணப்போகிறோம், என்றனர்.அதற்கு மகான்,அப்படியானால் நீங்கள் தவறு செய்கிறீர்கள். ஏனெனில், விலங்குகள் தங்களுக்கு போதுமான அளவு உணவையே எடுத்துக் கொள்ளும். மனிதர்கள் தான் என்ன சாப்பிட்டாலும், இதை இன்னும் கொஞ்சம் சாப்பிட்டிருக்கலாமோ! இதை இன்னும் ருசியாக சமைத்திருக்கலாமோ என்று குறைபடுவார்கள். மனிதர்களை திருப்திப்படுத்த முடியாது. மிருகங்கள் அப்படியில்லையே! என்றார்.இனியேனும், இருப்பதைக் கொண்டு திருப்திப்படுவோமா!

# சிங்கமாய் இரு

ஞானியைச் சந்தித்த பக்தன் ஒருவனிடம் சிங்கமாய் இரு. நாயைப் போல இராதே! என சுருக்கமாக அறிவுரை கூறினார். அதன் உள்ளர்த்தம் விளங்காத பக்தன், ஞானியையே விளக்கம் தர வேண்டினான்.

ஒரு சிங்கத்தின்மீது அம்பு எய்யப்படுமானால் அது அம்பை பொருட்படுத்தாமல், எய்தவனை நோக்கியே பாயும். ஒரு நாயின் மீது எதையாவது வீசி எறிந்தால், அது எறியப்பட்ட பொருளை நோக்கியே ஓடும். எறிந்தவனைப் பற்றிக் கவலைப்படாது.

அதுபோல் வாழ்வில் கஷ்டங்களையும் பிரச்னைகளையும் எதிர்கொள்ள நேரும்போது சிங்கத்தைப்போல் அவற்றைப் பற்றிக் கவலைப்படாமல், அதை அளித்த இறைவனைப் பற்றி நினைக்க வேண்டும். பிரச்னைகளைத் தீர்க்கும் வழியையும், வலிமையையும் எனக்குத் தர வேண்டும் என அவரிடம் பிரார்த்திக்க வேண்டும். அதை விடுத்து நாயைப் போல் பிரச்னைகள் பின்னே ஓடக்கூடாது! என ஞானி கூற, தெளிவு பெற்றான் பக்தன்.

விஜயபாரதம்





விஜயபாரதம் தேசிய வார இதழ்

சந்தா செலுத்த / புதுப்பிக்க

www.vijayabharatham.org

என்ற இணையதளம் அல்லது

044 - 26420870 என்ற தொலைபேசி

எண்ணில் தொடர்பு கொள்ளவும் .

93613 99006